REGD. No. M. 6311

PHONE No. 55630

தனி இதழ் ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 210

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சந்தா விபரம்

உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0

வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

சென்னை: மாசி 4உ திங்கள் (15—2—54) ★ ★ ★ வெளியீடு: மாசி 5உ செவ்வாய் (16—2—54)

மாநாட்டில் ஒன்றாகச் சேர்ந்தோம்! ஒன்றாக சிறைக்குள் தள்ளப்பட்டோம்!

—★—

மாணவர்கள் கூட்டத்தில் மீண்டும் ஒன்றுபட்டுள்ளோம்! நீதி மன்ற அழைப்பும் கிடைத்துள்ளது!

—o—

'அரசியலில் இரு வகை உண்டு — 'கிளர்ச்சி அரசியலையே' இங்கு நுழைந்து விட்டனர்!"

ஆச்சாரியார் சூது மதியை சுட்டிக் காட்டுகிறார் சம்பத்

சென்னை, பிப். 15—

"முன்பு சென்னையிலே கூடிய இரண்டாவது மாவட்ட மாநாட்டின்போது, ஊருக்கொருவராக இருந்த எங்களை எல்லாம் ஒன்றாகச் சேர்த்தார்கள். சேர்ந்த நாங்கள் பிறகு ஊருக்குத் திரும்ப இயலாதுபோயிற்று. ஆறு மாதங்கட்குப் பிறகு, திராவிட மாணவர்கள், எங்கெங்கோ இருந்த எங்களை ஒன்றாகச்சேர்த்திருக்கிறார்கள். வருகிற 19-ந் தேதி அப்பீல் வழக்கு நடைபெறப் போவதை எண்ணினால், எங்கே, முன்புபோல, இப்போதும் அவரவர்கள் ஊருக்குத் திரும்ப முடியாமற் போகுமோ என்றெண்ணுகிறேன்,"

—இவ்வாறு, சென்ற 12-ந் தேதி மாலை, கோகலே மண்டபத்தில், சென்னை மாவட்ட திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற தூத்துக்குடி நிதியளிப்பு விழாக் கூட்டத்தில் பேசுகையில், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் குறிப்பிட்டார். தொடர்ந்து அவர் பேசினார்:—

"மாணவர்கள் அரசியலில் கலந்து கொள்ளலாமா என்று நம்மைக் கேட்பது போலத்தான், நேருவையுங் கேட்டார்கள் மாணவர்கள். கல்யாணியில் சமீபத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் பெண்கள் மாநாடு, குடிசைத் தொழில் முன்னேற்ற மாநாடு போன்ற பல பிரிவுகளில் மாணவர் மாநாடு ஒன்றும் நடைபெற்றது. அந்த மாநாட்டின்போது பண்டிதர் நேரு அவர்களிடம் மாணவர்கள் 5 கேள்விகள் அடங்கிய தாள் ஒன்றைத் தந்தனர்.

"அதில் முதலாவதும் முக்கியமானதும், 'மாணவர்கள் அரசியலில் பங்கு கொள்ளலாமா? என்னும் கேள்விதான் எல்லாக கேள்விகளுக்கும் உடனுக்குடன் பதிலிறுக்கும் பண்டித நேரு, இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல நீண்ட நேரம் யோசித்திருக்கிறார். ஒருகணம், 'கலந்து கொள்ளலாம்,' என்று கூறலாமென நினைக்கிற அவர், மறுகணம், 'கூடாதென்று சொல்ல வேண்டும்' என்றும் யோசிக்கிறார். தான் விடுதலைப் போரில் ஈடுபட்டிருந்த நேரத்தில், மாணவர்களையும் விடுதலைப் போரிலே பங்கு கொள்ளுமாறு அழைத்த சம்பவத்தை நினைக்கும்போது, மாணவர்கள் அரசியலில் 'கலந்து கொள்ளலாம் என்று சொல்லத் தோன்றுகிறது. ஆனால் மறுகணம், விடுதலை கிடைத்ததான், பிரதமராகிவிட்ட பிறகு, லட்சுமணபுரியில் மாணவர்கள் கிளர்ச்சி செய்து, தங்கள் உரிமையை நிலைநாட்டிக் கொண்ட சம்பவத்தை நினைக்கும்போது, "கூடாது, கூடாது" என்று சொல்ல எண்ணுகிறார். இப்படியாக இந்த இரண்டு சம்பவங்கட்கும் இடையில் ஊசலாடிவிட்டு, புதிய ஞானோதயம் பெற்றவர் போல், "மாணவர்கள் அரசியலில் ஈடுபடலாம்; ஆனால், 'கிளர்ச்சி அரசியலிலே' ஈடுபடக்கூடாது" எனகிறார்.

"அவர் சொல்கிறபடி நாம், இப்போது உலகத்திலே எங்கெல்லாம் 'கிளர்ச்சி அரசியல்' இருக்கிறதென்று பார்ப்போம். மாணவர்கள், 'கிளர்ச்சி அரசியலிலே' பங்கு கொள்ளலாமா கூடாதா என்பதைத் தெரியுமுன், 'கிளர்ச்சி அரசியல்' எந்தெந்த நாட்டிலே இருக்கிறது—ஏன் இருக்கிறதென்பதைத் தெரிந்துகொள்ள வேண்டாமா? அமெரிக்காவிலே, இங்கிலாந்திலே, பிரான்சிலே இங்கெல்லாம் 'கிளர்ச்சி அரசியல்' இருக்கிறதா என்றால், இருக்கவில்லை"

"இங்கிலாந்திலே இல்லை; ஆனால், அது காலனி நாடாக வைத்துக்கொண்டிருக்கிற பிரிட்டிஷ் கயானாவிலே 'கிளர்ச்சி அரசியல்' இருக்கிறது. பிரான்சிலே இல்லை; ஆனால், அதன் பிடியிலே இருக்கிற டுனீசியாவிலே 'கிளர்ச்சி அரசியல்' இருக்கிறது. இந்தியத் துணைக் கண்டத்திலேயும் 'கிளர்ச்சி அரசியல்'தான் இருக்கிறது ஏன்? ஒரு நாட்டிலே 'கிளர்ச்சி அரசியல்' எப்போது ஏற்படுகிறது என்றால், அந்த நாட்டிலே உள்ள ஆட்சியின்மீது, அந்த ஆட்சிபீடத்தின் அடிப்படைமீது, மக்கள் என்று சந்தேகம் கொள்கிறார்களோ, அன்றுதான் 'கிளர்ச்சி அரசியல்' ஏற்படுகிறது.

"திருவாங்கூர் - கொச்சியிலே சமீபத்தில் நடைபெறவிருக்கும் தேர்தலுக்காகப் பிரச்சாரம் செய்யச் சென்ற நேரு, 'நீங்கள் காங்கிரசை இங்கே தோற்கடிப்பதைப் பற்றிக் கவலை இல்லை; ஆனால், மற்றெல்லா மாநிலங்களிலும் காங்கிரஸ்தான் ஆட்சி பீடத்திலுள்ளது என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது; இங்கே மட்டும் காங்கிரசல்லாத மந்திரி சபை ஏற்பட்டால் உங்களுக்கு அது நல்லதல்ல,' என்று சொல்லியிருக்கிறார். வர்த்தக மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், "இங்கே காங்கிரசல்லாத மந்திரிசபை ஏற்பட்டால் அதை எப்படி காலி செய்வதென்பது எங்கட்குத் தெரியும்,' என்று மிரட்டியிருக்கிறார். இதற்கெல்லாம் பொருள் என்ன?

"இந்த நாட்டில், மக்கள், தாங்கள் விரும்புகிறவர்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம் என்ற ஜனநாயக உரிமை, இந்த நாட்டின் ஆட்சிபீடத்திலேயுள்ளவர்களால் பறிக்கப்படும்போது, 'கிளர்ச்சி அரசியல்' அன்றி, அமைதியான அரசியலா இந்த நாட்டில் நிலவ முடியும்? ஆட்சிபீடத்திலுள்ள காங்கிரசாரைத் தவிர மற்ற எவரும் தங்கள் கருத்தை 'கிளர்ச்சி அரசியலில்' ஈடுபட்டுத்தான்—சிறைக்குப் போய்த்தான் சொல்ல வேண்டுமோ? இங்கிலாந்தை சர்ச்சில் ஆள்கிறார். அவருக்கு எதிர்க் கட்சி ஸ்தானத்திலே உட்கார்ந்திருக்கிற அட்லி தன் கருத்தைச் சிறைக்குச் சென்றுதான் சொல்ல வேண்டுமென்கிற நிலையில்லை. 'எங்கள் நாட்டிலே கம்யூனிசத்தைக் காலெடுத்து வைக்க விடமாட்டோம்,' என்று கர்ஜிக்கத்தான் செய்கிறார் சர்ச்சில்; ஆனாலும், அங்கேயும் கம்யூனிஸ்டுகள் இருக்கத்தான் செய்கிறார்கள்; சர்ச்சில் சர்க்காரின் போக்கைக் கண்டிக்கத்தான் செய்கிறார்கள்; அங்கிருந்து இங்கு வந்துகூட மதுரையிலே பேசிவிட்டுப் போகத்தான் செய்கிறார் ஹ பொலிட் என்கிற கம்யூனிஸ்டு. அவர் இங்கிலாந்திலே தனது கருத்தைச் சொல்ல சிறைக்குச் செல்லத்தான் வேண்டுமென்கிற அவசியத்திலில்லை. ஆனால். இங்கே, அண்ணா தன் கருத்தைச் சொல்ல சிறைக்குப் போய்த்தான ஆக வேண்டுமென்கிற நிலைமை இருக்கிறது. இந்த நிலைமை ஏற்படுவானேன்? இந்த நிலைமைக்குக் காரணம் இந்த நாட்டின் அரசியல் அடிப்படையில் ஏதோ ஒரு விபரீதம் இருக்கிறதென்பதுதானே பொருள்?

"எண்ணவும், எழுதவும், எடுத்துச் சொல்லவும் தரப்பட்டிருப்பதாகச் சொல்லப்படும் உரிமைகள் ஒருங்கே ஒரு சர்க்காரால் பறிக்கப்படும்போது அந்த உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ள, அந்த நாட்டில் உள்ள எல்லோரும், எல்லாவகையிலும் ஈடுபட்டுத்தானே ஆகவேண்டும்? வீட்டிலே அமைதி நிலவும்போது, வீட்டிற்கு ஆபத்தொன்றுமில்லை என்கிறபோது, 'சமையலைப் பார்ப்பது தாயின் வேலை—சம்பாதிப்பது தந்தையின் வேலை—சரிவர படித்து பயன்பெறுவது மகனின் வேலை,'—என்று நடைமுறைக் கட்டளைகளை வகுத்துக் கொள்ளலாம்; ஆனால் வீட்டிற்கு ஆபத்தென்றால், வீட்டிலே தீப்பிடித்துக் கொண்டதென்றால், எல்லோரும் ஒன்று சேர்ந்து தீயை அணைக்க ஈடுபட்டுத்தானே வேண்டும்? அதைப் போலவேதான், வேறு எந்த நாட்டிலும் நிலவாத ஒரு விபரீத சூழ்நிலை இந்த நாட்டிலே நிலவும்போது, மாணவர்கள் அதை வெறுமனே 'பார்த்துக் கொண்டிருப்பவர்களா'க மட்டும் எப்படி இருக்க முடியும்? இந்த நாட்டின் இன்றைய அரசியல் போக்கு, நாட்டு மக்களை எல்லோரையும் பாதிக்கக்கூடியதாயிருக்கும்போது எப்படி வாளாவிருக்க முடியும்—மாணவர்கள்?

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

மாரியம்மன் கோயிலுக்கு முஸ்லீம் பூசாரி!

—(:)—

மற்ற இருவரில் ஒருவர் பார்ப்பன பூசாரி

ராஜகோட், பிப். 15—

சௌராஷ்டிராவில் காலவாத் என்ற ஒரு சிறு கிராமத்தில் சித்தலா மாதா என்ற மாரியம்மன் கோயில் ஒன்று உள்ளது. ஜாம்வந்தலை என்ற புகை வண்டி நிலையம் உள்ள ஊருக்கும் காலவாத் என்ற கிராமத்திற்கும் 18 கல் தொலை உள்ளது.

அங்கு சித்லா மாதா சிலையை நீராட்டுவதற்கு மூன்று பூசாரிகள் உள்ளனர். அவர்களில், ஒரு பார்ப்பனர், ஒரு முஸ்லீம், ஒரு சாது ஆகியோர் இருக்கின்றனர். இது ஒரு மாரியம்மனும்!

மாரியம்மன் கோயிலுக்கு ஒரு முஸ்லீம் பூசாரியாக இப்பொழுதும் இருந்து வருவதற்கு ஒரு சரித்திரச் சம்பவம் ஒட்ட வைக்கப்பட்டு இருக்கிறது. அதாவது, பல நூற்றாண்டுகளுக்கு முன்பு இந்தியாவை ஆண்ட அலாவுதீன் கில்ஜி என்ற முஸ்லீம் அரசன் சித்லா மாதா கோவிலையும் இடித்துத் தள்ள முனைந்தானாம். அப்பொழுது கோயில் பூசாரியாக இருந்த பார்ப்பனர், ஒரு முஸ்லிமைப்

(4-ம் பக்கம் பார்க்க)

புகலூர் ஆலை திறக்கப்படுகிறது

—o—

சிலருக்கு இனிப்பாகவும், பலருக்குக் கசப்பாகவும் இருக்கிறது!

புகலூர், பிப். 13—

1953ம் ஆண்டு பிப்ரவரி மாதம் மூடப்பட்ட புகலூர் சர்க்கரை ஆலை பானது, தொழிலாளர் களுக்கு மிகுந்த பாதகமளிக்கும் திட்டமாகும், இம்மாத இறுதிக்குள் மீண்டும் திறக்கப்படுமெனத் தெரியவருகிறது.

இது சம்மந்தமாக ஆலையின் விளம்பரப் பலகையில் ஒட்டப்பட்டுள்ள ஒரு அறிவிப்புத்தாளில், "இரண்டு மாதத்திற்கு உட்பட்ட ஒரு குறுகிய கால அளவிற்கு ஆலையைத் திறப்பதற்கு வேண்டிய நிலைமை அநுகூலமாய் இருப்பதாகத் தெரிவதால். உடனடியாக மீண்டும் தற்காலிகமாய் ஆலை திறக்கப்படும்"

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், அந்த அறிவிப்பில் தொழிலாளர்களின் வேலை, ஊதி

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி. மு. க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 15—2—1954 திங்கள்

உப்புமா!— சி. ஆர். கிண்டினது!

" ஒரு படி உப்பு போட்டு, ஒரு பிடி ரவை போட்டு, உப்புமா கிண்டி வையடி! பெண்ணே, கிண்டி வையடி!"

இப்படி ஒரு பாட்டு, புது மணத் தம்பதிகளை ஊஞ்சலில் உட்கார வைத்து, மற்றவர் குரங்காட்டம் ஆடும்பொழுது சிறுமியர்கள் மேற்குறித்துள்ள கருத்தை இசைப் பாட்டாகப் பாடிக் கிண்டல் செய்வர். கேட்டிருக்கிறோம்! கேட்டு மகிழ்ந்து இருக்கிறோம்! அதில் மறைந்துள்ள நகைச்சுவையை நினைத்து நினைத்து ரசித்தும் இருக்கிறோம்!

அந்தக் கிண்டல் பாட்டை மெய்யென நம்பி, எந்த புதுப் பெண்ணும், பாட்டில் குறிப்பிட்டுள்ளபடி உப்புமா கிண்டக் கிளம்பமாட்டாள். அப்படிக் கிண்டக் கிளம்பும் பித்துக்குளிப் பெண்ணை, அவள் எவ்வளவு ஓவியத்து எழுதஒண்ணு உருவத்தவளாய் இருந்தாலும், இல்லக் கிழத்தியாக வைத்துக்கொள்ள எந்த முட்டாள் கணவனும் முன்வரமாட்டான்.

எடுத்துக்காட்டியுள்ள பாட்டில் கூறப்பட்டுள்ள முறைப்படித்தான், கல்வித் துறையில், செயலளவில் சி. ஆர். உப்புமா கிண்டக் கிளம்பி இருக்கிறார்!

கனம் ஆச்சாரியாரின் புதிய தொடக்கக் கல்வித் திட்டம், கேலிப் பாட்டில் கூறப்பட்டுள்ள, உப்புமா தயாரிப்புத் துறையை அப்படியே பின்பற்றி உள்ளதாகும்.

உப்புமா கிண்டுவதற்கான மாவும் குறைவு, எண்ணெயும் கொஞ்சம், கடுகும் மிளகாய் வற்றலும் தேவையான அளவில் இல்லை, உப்பு மட்டும் தேவைக்கு அதிகமாகவே படிக் கணக்கில் இருக்கிறது. விருந்துக்கு வருமாறு பலரையும் அழைத்துவிட்டோம்; அழைப்பை ஏற்றுக்கொண்டு அனைவரும் வந்துவிட்டனர்; வந்த விருந்தினர் ஏமாற்றம் அடையாமலிருக்க எல்லோருக்கும் உப்புமா பரிமாறியாக வேண்டும்; அதற்கோ போதுமான மாவு மட்டும் இல்லை; இருந்தாலும் உப்புமாவிற்குத் தேவைப்படும் பொருள்களில் ஒன்றான உப்பு ஏராளமாக இருக்கிறது; மாவு போதிய அளவு இல்லாமற் போனால் என்ன, உப்புமா தான் அனைவருக்கும் தருவதாக வாக்களித்துள்ளோமேயல்லாது நல்ல முறையில் தயாரித்த நாவுக்கு உருசியான உப்புமா தருவோம் என்று வாக்குறுதி தந்துள்ளோம்; எனவே, உப்பை அளவுக்கு அதிகமாகக் கொட்டி நாம் தயாரிக்கும் உப்புமாவை விருந்தினர் ஆர்வத்தோடு தின்றாலும் தின்னாமல் போனாலும் நமக்கு என்ன கவலை, ஒருவருக்கும் இல்லை என்று சொல்லாமல் அனைவருக்கும் உப்புமா பரிமாறியே தீருவது என்று கனம் ஆச்சாரியார் கல்வித் துறையில், உப்பை அதிகமாகக் கொட்டி, உப்புமா தயாரித்துவிட்டார். அதைக் கேட்டவர் கேலி செய்கிறார்கள்! கண்டவர் கை கொட்டி நகைக்கிறார்கள்! உண்டவர் கண்டனக் கணைகளை சரமாரியாகப் பொழிகின்றனர்!

ஆனால், உப்புமா தயாரித்த கனம் ஆச்சாரியாரும், அவர் அடிப்பொடிகளும், உப்பு மிதமிஞ்சிக் கிடக்கும் உப்புமாவை— புதிய கல்வித் திட்டத்தைப் பாராட்டிப் புகழ்கிறார்கள். குழி தோண்டிப் புதைக்கவேண்டிய உப்புமா தயாரித்தவரின் பிரகஸ்பதித்தனத்தைப் புகழ்ந்துவிட்டு, மேலும் புகழ வார்த்தைகளுக்கு பலமொழி அகராதிகளைத் துழவுகிறார்கள்!

உப்பை அதிகமாகக் கொட்டி, மாவைக் குறைவாகக் கூட்டி, கழிவுத் தொட்டியில் கொட்ட வேண்டிய உப்புமா தயாரித்த பேரறிவாளராம் கனம் ஆச்சாரியார், குறைவாக உள்ள மாவை அனைவருக்கும் பட்சபாதம் காட்டாமல் பகிர்ந்தளிக்க, இந்த முறையில் உப்புமா தயாரித்ததில் என்ன தவறு என்று தூர்வாசர்போல் துள்ளிக் குதிக்கிறார்! அவருடைய சின்ன திருவடிகளும், பெரிய திருவடிகளும் துடுக்குத்தனமாக, குருநாதர் கக்கினதை மெல்லாமல் விழுங்கி, கக்குவாய் இருமல் கண்ட சிசுக்கள்போல் நாடெங்கும் கக்கித் திரிகின்றன! அதிலிருந்து கிளம்பும் துர்நாற்றமோ, சுடுகாட்டு நாற்றமாக மூக்கைத் துளைத்துச் சென்று, நுகரும் ஆற்றலையே நாசியில் இருந்து நாசம் செய்துவிடுகின்றது!

மாவுக்கு ஏற்ற அளவு உப்பு போட்டு, எண்ணெயைத் தோன்றவிட்டு, கடுகும், மிளகாயும், உளுத்தம் பருப்பும், கடலைப் பருப்பும் வேண்டிய அளவு வறுத்துக் கொட்டி, வெந்தபதத்தில் வறுத்த முந்திரிப் பருப்பையும் சேர்த்து, மணம் வீச கிண்டி வைப்பதற்கல்லவோ 'உப்புமா' என்ற பெயர் பொருந்தும்?

அவர் செய்துவைத்துள்ளதற்கு அப்பெயர் பொருந்துமாறு இல்லையே என்றுள், தமது உள்ளத்தில் எழும் எரிச்சலை மறைத்துக்கொண்டு, "'உப்புமா' அனைவருக்கும் தந்தாக வேண்டும் என எமது கூடடுத் தோழர்கள் முன் கூட்டியே சிலாசாசனம் செய்துவைத்து விட்டார்கள்; அந்த சிலாசாசனத்தில் ஒன்றும் 'உப்புமா' என்றால் இப்படி இப்படி இருந்தாக வேண்டும் என்ற திட்டவட்டமான விளக்கம் இல்லை; எனவே, உப்பு மிஞ்சிப்போனதாக இருந்தாலும் நான் தயாரித்துள்ளதற்கும் 'உப்புமா' என்றுதான் பெயர்; எனவே, நான் தயாரித்த உப்புமாவை அனைவரும் கட்டாயம் தின்றுதான் ஆகவேண்டும்; மறுப்பவரை, எதிர்ப்பவரை, ஏளனம் செய்பவரை, மிரட்டி வாயடைக்க சிறையுண்டு, குண்டாந் தடியுண்டு, துப்பாக்கிக் குண்டுண்டு, பாராட்டிப் பொய்கூற எம்மின ஏடுகள் ஏராளம் எம்பிடை உண்டு" என்று கனம் ஆச்சாரியார் அதிகார வெறிகொண்டு அங்கலாய்க்கிறார். புதிய கல்வித் திட்டம், மேல்கூறியுள்ள உப்புமா ரகத்தைச் சேர்ந்ததுதான்.

பத்தாண்டு காலத்திற்குள்ளாக, வயது வந்த சிறுவர் அனைவருக்கும் தொடக்கக் கல்வி கொடுத்தாக வேண்டும் என்ற ஒரு குறிக்கோள் விளக்கம் தரப்பட்டு இருக்கிறது, இந்திய அரசியல் சட்டத்திலே. அரசியல் சட்டத்தில் ஓரளவிற்கு எழுதப் படிக்கக் கற்பிக்கும் ஒரு முட்டாள் திட்டத்தைப் பற்றின நினைப்பே, அந்த உயர்ந்த குறிக்கோளை அரசியல் சட்டத்தில் சேர்க்க முனைந்த நோக்கிலே, அப்படிச் சேர்த்தவர்களுக்கு கனவிலும் தோன்றி இருக்காது என்பது நிச்சயம். அப்பொழுது அவர்களுக்குத் தெரிந்திருந்ததெல்லாம், தாங்கள் தங்கள் இளமையில் பெற்ற தொடக்கக் கல்வித் திட்டத்தைப் பற்றித்தான் இருக்க முடியும். வேண்டுமானால் ஆதாரக் கல்வித் திட்டத்தை, அவர்கள் கருதி இருக்கக்கூடும் என்று நாம் கொள்ளலாமே அல்லாது, சி. ஆர். திட்டம் போன்ற ஒரு கீழான திட்டத்தை அவர்கள் ஒருக்காலும் சிந்தித்திருக்கமாட்டார்கள். என்னவோ, ஓணானுக்கு வேலி சாட்சி என்பதுபோல, தமது கெடுகெட்ட புத்திக்கு கனம் ஆச்சாரியார் இந்திய அரசியல் சட்டத்தை சாட்சிக்குக் கூப்பிடுகிறார்! விபரீதப் போக்கு!

கனம் ஆச்சாரியாரின் புதிய கல்வித் திட்டமெனும் உப்பு மிஞ்சிய உப்புமாவை, கல்வி முறை எனும் பாக சாஸ்திரம், மட்டமான பண்டமாகக்கூட ஒருக்காலும் ஒப்புக்கொள்ளாது என்பது முக்காலும் நிச்சயம்!

உப்பு மிஞ்சிப் போன உப்புமாவை குப்பையிலேதான் கொட்டுவார்கள்! அதைப்போலவே, கனம் ஆச்சாரியாரின் திட்டத்தையும் தூக்கி எறியத்தான் எறிவார்கள்—கல்வியின் தரம் தெரிந்தவர்கள்!

நல்ல சமையல்காரன் என்ற பெயர், பண்டத்தில் உப்பைக் கொட்டி வைத்தவனுக்கும் பொருந்ாது! அது போலத்தான் உதவாக்கரை கல்வித் திட்டம் தந்த கபட வேடதாரிக்கு மேதாவி என்ற பெயரும் பொருந்தாது!

"கின்னரர் கிம்புருடர் அவதரித்த நாட்டில் கீரல் போடும் தற்குறிகள்?"

—(:)—

தி. மு. கழகத்தின் குறிக்கோள் — திட்டமேயன்றி, திட்டத்தின் கர்த்தா அல்ல!

—(:)—

திருப்பத்தூர் வரவேற்புக் கூட்டத்தில் தோழர் இரா. நெடுஞ்செழியன்

" 'தமிழ் நாட்டு ரயில் நிலையங்களுக்கு இந்திப் பெயர் ஏன்?'—என்று, அவைகளை அழித்தோம். இந்த நாட்டிலே 100-க்கு 84 பேர் படிக்கத் தெரியாதவர்கள்—தாய் மொழியாகிய தமிழிலேகூட கையெழுத்து போடத் தெரியாதவர்கள். தாய் மொழித் தமிழே தெரியாத நிலையில், கிறல் போடுகின்ற மக்கள் தொகை இந்தப் புண்ணிய நாட்டிலேதான்—நூற்றுக்கு 84; ஆண்டவர்கள் அடிக்கடி வந்து போனதும் இந்த நாட்டில்தான்; 12 ஆழ்வார்கள், 63 நாயன்மார்கள், முப்பத்து முக்கோடி தேவர்கள், கின்னரர், கிம்புருடர் ஆகியவர்கள் அவதரித்ததும், அருள்பாலித்ததும் இந்த நாட்டில்தான்; ஆய கலைகள் அறுபத்து நான்கும் அந்தாதிகளும், பதிகங்களும் பாடப் பெற்றுள்ளதும் இந்த நாட்டில்தான்;—இப்படிப்பட்ட புண்ணிய நாட்டில்தான், படியாதவர் தொகை 100-க்கு 84 கல்லாதார் தொகை மலிந்த நாட்டு ரயில் நிலையங்களுக்கு இந்திப் பெயர் ஏன்? இது வடநாட்டு ஏகாதிபத்திய ஆதிக்கத்தின் அறிகுறிதானே! நமது நேரம், நினைப்பு, ஆற்றல், அறிவு எல்லாம் தமிழுக்கே செலவழிக்க முடியாத நிலையில், லப்பாடி இந்திக்கு இந்நாட்டில் அவசியமென்ன என்று கேட்டோம்; 1½ மாத நோட்டீஸ் விடுத்தோம்; எடுக்கவில்லை—நாமே அழித்தோம்—இதைத்தான் 'சிறுபிள்ளைத்தனம்' என்றார் நேரு."

—இவ்வாறு, திருப்பத்தூரில் நடைபெற்ற தூத்துக்குடி நிதியளிப்பு விழாக் கூட்டத்தில், நன்றி கூறுமுகத்தான் தோழர் நெடுஞ்செழியன் அவர்கள் கூறினார்.

தொடர்ந்து அவர் சொன்னார்:—

'சிறையிலிருந்து வந்தோம்—சிறை போகக் காத்திருக்கிறோம்—எங்களுக்கு அளிக்கப்பட்ட தண்டனை போதாது என்று ஆச்சாரியார் அவர்கள் உயர்நீதி மன்றத்தைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

"திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட நாட்டின் அரசியல், பொருளாதார, சமுதாய இயல் ஆகியவற்றிற்காகப் பாடுபடும் கழகம். இதற்கு ஊறு செய்யும் எதையும் ஒழிக்க முன்வரும்; இதற்கு உறுதுணை செய்யும் எதற்கும் ஆக்கம் தந்து பணியாற்றும். வீழ்ந்து கிடக்கும் நாட்டு மக்களை உயர்த்த—சமுதாய வாழ்வு இன்னதென்பதை உணர்த்த—அவர்கள் நல்வாழ்வுக்கு வழி வகுக்க—அண்மையிலே மூன்று கோணங்களில் நின்று பணியாற்றினோம்.

கலைக்குதவாத திட்டம்

"அன்பர் ஆச்சாரியாரின் ஆரம்பக் கல்வித் திட்டம் கலைக்குதவாத் திட்டம்; நாட்டில் நடமாட முடியாத திட்டம்; இளைஞர்களைச் சீரழிக்கும் திட்டம்; மாணவர்களை மட்டந் தட்டும் திட்டம்," என்று திராவிட முன்னேற்றக் கழகம் கூறுகிறது. ஆச்சாரியார், பார்ப்பனர் என்ற காரணத்திற்காக இந்தத் திட்டத்தை நாங்கள் வெறுக்கவில்லை.

பார்ப்பனர்கள் கூறுகிறார்கள் என்பதற்காக, அவர்களுடைய நல்ல செயல்களை நாங்கள் பாராட்டாமல் இருப்பதில்லை. அவ்வாறே, திராவிடர்கள் கூறுகிறார்கள் என்பதற்காக அவர்தம் தீயச் செயல்களைக் கண்டிக்காமலுமிருப்பதில்லை. சுப்பிரமணிய பாரதியாரின் சீர்திருத்தப் பாடல்களை நாங்கள் வெறுத்ததில்லை. அவ்வாறே வ. ரா.—வின் கருத்துக்களையும் வெறுத்தொதுக்கியதில்லை; — ஆதரித்திருக்கிறோம். அதுபோன்றே, தோழர் காமராஜர் திராவிடர் என்பதற்காக நாங்கள் அவரை ஆதரிக்கவில்லை. காஞ்சி காமகோடி பீடம், சம்பந்த, பரமாச்சாரி, பண்டார சன்னதிய சுவாமிகளை நாங்கள் ஆதரிக்கவில்லை — வெறுத்திருக்கிறோம். சர்க்காரின் "சாகுபடித் திட்டத்தை" சிதம்பரம் மாநாட்டிலேயே பாராட்டினோம்; ஆனால், அவர்களுடைய கல்வித் திட்டத்தை வெறுக்கிறோம்—ஒழிக்க முனைகிறோம். எதையும் 'காய்தல் உவத்தல் அகற்றி ஆய்தல் நம் கடன் ஆம்!'

பாலப் பருவம் தொழில் பயிலும் பருவமன்று

"ஆச்சாரியார் திட்டத்தால் பாதி நேரம் கல்வி பயிலலாம்; பாதி நேரம் தொழில் பயிலலாம்" எனப்படுகிறதே—நான் கேட்கிறேன், ஒன்று முதல் 5 வயது வரை உள்ள மாணவர்கள்தான் கைத்தொழில் கற்கும் வயதுடையவர்களா?

"நாட்டில் குடிசைத்தொழில் வளரவில்லை; பொருளாதாரம் கெடுகிறது; ஆகவே, எனது திட்டத்தால் வேதாந்தம் சிறக்கும்; இயந்திரம் ஒழியும்; குடிசைத் தொழில் வளரும்; குலத் தொழில் வளரும் — குருகுல நெறி வளர்ந்தோங்கும்," என்று வாதாடுகிறார் அன்பர் ஆச்சாரியார். காங்கிரஸ்காரர்களே நெஞ்சில் கை வைத்துச் சொல்லட்டும்—இந்தத் திட்டம் அமுலாக்கப் பெற்ற இந்த ஆறு மாத காலத்திலே, எவ்வளவு வெற்றி பெற்றது?

எதிர்ப்பு ஏன்?

நாங்கள் இந்தத் திட்டத்தை ஏன் எதிர்க்கிறோம்? — இந்த நாட்டில் 38,000 ஆரம்பப் பள்ளிகள் உள்ளன—படிக்கும்காலத்தை 3 மணி நேரமாக ஆக்கிய கொடுஞ்செயல் கூடாது என்று கருதுவதால்! மாறுதல் செய்யப்படவேண்டிய இடம் ஆரம்பப் பள்ளிகள் அல்ல — மாறுதல் செய்யவேண்டுமெனில் உயர்நிலைப் பள்ளிகளிலே, தொழிற் கல்லூரிகளிலே, செய்யலாம். மாணவன் "அ" தெரிந்துகொள்ளாத நிலையில்—எழுத்துக் கற்கப் புகும் நிலையில்—தொழில் கற்பிக்கப் புகும் நிலை கூடாது — கூடாது—கூடாது. 5 வயதுப் பருவம் தொழிற் கற்கும் பருவம் அல்ல—அல்ல—அல்ல. ஆகவே தான், ஆச்சாரியார், ஆரம்பத்திலேயே தவறு செய்கிறார் என்கிறோம்.

சிறைச்சாலையாம் பள்ளி!

"பள்ளி சிறைச்சாலையாக

(4-ம் பக்கம் பார்க்க)

மொழிவாரி மக்கள் தொகை கணக்கு விவரம்

—(:)—

49,490 சதுர மைல் பரப்பளவு பகுதியில் தமிழ் பேசப்படுகிறது

புதுடில்லி, பிப். 14—

குறிப்பிட்டதோர் மொழி பேசுபவர்கள் பெருவாரியாகவில்லாத 12 மாவட்டங்கள் மேற்கு, தெற்கு, மத்திய இந்தியாவில் உள்ளன. பம்பாய் மாநகரமும் இந்த ரகத்தில் சேர்ந்ததுதான்.

மேற்படி 12 மாவட்டங்களைத் தவிர எஞ்சியவை அனைத்தும், மராத்தி, குஜராத்தி, தெலுங்கு, தமிழ், கன்னடம், மலையாளம், இந்தி ஆகிய மொழிகளில் ஒன்றை பெருவாரியான மக்களால் பேசப்படும் பிரதேசங்களாக உள்ளன.

மொழி அடிப்படையில் மக்கள் தொகையைப் பாகுபாடு செய்ததில் இத்தகவல்கள் கிடைத்தன. இந்தியாவின் கிழக்கு, வடக்குப் பிராந்தியங்கள் பற்றிய விவரங்கள் இன்னும் தயாராகவில்லை.

எந்த மொழி பேசும் மக்களும் பெருவாரியாயில்லாத மாவட்டங்கள் வருமாறு:

பம்பாய் மாநகரம்; தென் கன்னடம் (சென்னை); குடகு, நீலகிரி (சென்னை); பங்களூர் (மைசூர்); பீடார் (ஐதராபாத்); பஸ்தார், பேதுல், நிமார், (மத்திய பிரதேசம்); நிமார், தார், ஜாபுவா (மத்திய பாரத்).

ஜாபுவா மாவட்டம் தனிப்பட்ட ரகமாகும். அங்கு எந்த அங்கீகரிக்கப்பட்ட மொழி பேசுவோரும் பெருவாரியாக இல்லாத போது,67 சதவிகிதத்தவர் பிகிலி எனும் மலை ஜாதியினர் மொழியில் பேசுகின்றனர்.

சென்னை, மைசூர், ஐதராபாத் ஆகிய மாநிலங்களில் 1,05,306 சதுர மைல் பரப்பில் வசிக்கும் 81,2,756 மக்களில் 85 சத விகிதத்தவர் தெலுங்கு பேசுகின்றனர்.

தமிழர்கள் மட்டும் ஒரே மாநிலத்தில் வசிக்கின்றனர். சென்னை மாநிலத்தில் 49,490 சதுர மைல் பரப்பில் வசிக்கும் 2,89,15,427 பேரில் 82 சத விகிதத்தினர் தமிழ் பேசுகின்றனர்.

சென்னை, திருவாங்கூர் — சென்னை, திருவாங்கூர் — கொச்சியில் 14,988 சதுர மைல் பிரதேசத்தில் வசிக்கும் 1,40,38,767 பேர்களில் 89 சத விகிதத்தினர் மலையாளம் பேசுகின்றனர்.

மைசூர், பம்பாய், ஐதராபாத் மாநிலங்களில் 64,304 சதுர மைல் பகுதியில் வசிக்கும் 1,48,78,751 மக்களில் கன்னட மொழி பேசுபவர் 72 சத விகிதத்தவராவர்.

மத்தியப் பிரதேசம், மத்திய பாரத், போபால், விந்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் 1,36,381 சதுர மைல் பரப்பில் வசிக்கும் 2,24,70,261 பேர்களில் இந்தி பேசுவோர் 85 சத விகிதமாகும்.

மராத்தி மொழிப் பிரதேசம், 1,16,727 சதுர மைலில், பம்பாய், ஹைதராபாத், மத்திய பிரதேசத்தில் பரந்து கிடக்கிறது. அதில் வாழும் 2,88,84,572 பேர்களில் மராத்தி மொழி பேசுவோர் 83 சதவிகிதம் ஆகும்.

பம்பாய், சௌராஷ்டிரா, கட்ச, மாநிலங்களில் 71,311 சதுர மைலில் உள்ள 1,61,11,754 மக்களில் குஜராத்தி மொழி பேசுவோர் 94 சத விகிதமாவர்.

12 மாவட்டங்களின் நிலவரம்

பம்பாய் நகர் மக்கள் தொகை 28,59,270 இதில் மராத்தி மொழி பேசுவோர் 44 சத விகிதம்; குஜராத்தி 18 சத விகிதம்; உருது 10 சத விகிதம், பிறமொழி பேசுபவர் 28 சத விகிதம்.

17,48,991 பேர் கொண்ட தென் கன்னட ஜில்லாவில் துளு பேசுவோர் 40 சதவிகிதம், மலையாளம் 24 சதவிகிதம் கன்னடமும், கொங்கணியும் முறையே 17, 14 சதவிகிதங்கள்.

2,29,405 பேர் வசிக்கும் குடகில் கன்னட மொழியை 35 சத விகிதத்தவரும், மலையாளம் 14 சத விகிதத்தவரும், கூர்கி 29 சதவிகிதத்தவரும் பேசுகின்றனர்.

நீலகிரி ஜில்லாவின் மக்கள் தொகை 3,31,729 இதில் தமிழ் பேசுபவர் 38 சத விகிதம்; படகா, மலையாளம், கன்னட மொழிகளை முறையே 21, 13, 13 சத விகிதத்தினர் பேசுகின்றனர்.

21,27,061 பேர் வசிக்கும் பெங்களூர் மாவட்டத்தில் கன்னடம் பேசுவோர் 49 சத விகிதமாகும். தெலுங்கு 18; தமிழ் 17; இந்துஸ்தானி 10 சத விகிதங்கள்.

பீடார் (ஹைதராபாத்) மாவட்டத்தில் 39 சத விகிதத்தினர் மராத்தியும், 28 சதவிகிதத்தினர் கன்னடமும், 16 உருதுவும், 15 சத விகிதத்தினர் தெலுங்கும் பேசுகின்றனர் மொத்த மக்கள் தொகை 11,72,702 ஆகும்.

தென்னாட்டின் மொழி வட்டாரங்கள் பல்வேறு மக்களில் அவ்வட்டார மொழி பேசுவோர் விகிதாச்சாரம் வருமாறு:—

தமிழ்

சென்னை மாநிலம்:- வட ஆற்காடு 81; தென் ஆற்காடு 91, செங்கல்பட்டு 82; கோயமுத்தூர் 66; சென்னை நகரம் 68; மதுரை 77; ராமநாதபுரம் 87; சேலம் 77; தஞ்சாவூர் 96; திருச்சிராப்பள்ளி 88; திருநெல்வேலி 92.

மலையாளம்

சென்னை மாநிலம்:- மலபார் 96

திருவாங்கூர்-கொச்சி:- திருவனந்தபுரம் 61; கொல்லம் 96, கோட்டயம் 92; திருச்சூர் 93

கன்னடம்

மைசூர் மாநிலம்:- மைசூர் 85; மண்டியா 93; ஹஸ்ஸன் 86; சிர்மகளூர் 71; ஷிமோகா 74; சித்தல்துர்க் 72; தும்கூர் 79.

பம்பாய் மாநிலம்:- பெல்காம் 64; பிஜப்பூர் 84; தார்வார் 81; கனரா 55

ஐதராபாத் மாநிலம்: ரெய்ச்சூர் 63; குல்பர்க்கா 55

மக்கள் தொகையில் 55 சத விகிதம் கன்னடம் பேசும் மக்களிருந்த பெல்லாரி மாவட்டம் இப்பொழுது மைசூர்—ஆந்திராவுக்கிடையே பிரிக்கப்பட்டுள்ளது.

தெலுங்கு

ஆந்திரா — அனந்தப்பூர் 79; சித்தூர் 74; கடப்பை 87; கிழக்கு கோதாவரி 97; மேற்கு கோதாவரி 97; குண்டூர் 93, கிருஷ்ணா 94; ஸ்ரீகாகுளம் 89; விசாகபட்டினம் 96.

மைசூர்:- கோலார் 54.

ஐதராபாத்:- ஐதராபாத் 53; மகபூப்நகர் 84, நல்கொண்டா 56 [?]; நிஜாமாபாத் 82; மேதக் 88; கரீம் நகர் 94; வாரங்கல் 82; நலகொண்டா 89.

கழகக் கூட்டங்கள்

★

குடந்தை

16—2—54 மாலை 6 மணிக்கு

இடம்: ஜூப்பிளி பூங்கா

தலைவர்: கே. கே. நீலமேகம்

பேசுவோர்:

சி. என். அண்ணாதுரை

ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ.

★

குடவாசல்

17—2—54 மாலை 6 மணிக்கு

இடம்: கீழ வீதி

தலைவர்: கே. கே. நீலமேகம்

பேசுவோர்:

சி. என். அண்ணாதுரை

ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ.

இன்னிசை: நாகூர் அனீபா

பொதுச் செயலாளர் அண்ணாதுரை சுற்றுப் பயணம்

★

பிப். 16 முதல் 19 வரையில்: தஞ்சை மாவட்டம்:

„ 16: கும்பகோணம்

„ 17: குடவாசல்

„ 18: கோரடாச்சேரி

„ 19: நாகப்பட்டிணம்

„ 21: மதுரை நகர் தி. மு. கழகப் பொதுக் கூட்டம். இரவு-நாடகம்

„ 22: பட்டிவீரன்பட்டி மறைந்த மாவீரர் டபிள்யூ. பு. அ. சௌந்திரபாண்டியன் அவர்கள் முதல் ஆண்டு நிறைவு விழா-இரவு நாடகம் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வார்.

„ 23: சிவகாசி நிதியளிப்புக் கூட்டம்

„ 28 முதல் மார்ச் 3 வரை சேலம் மாவட்டம் சுற்றுப் பிரயாணம்

போளூரில் பொதுச் செயலாளர் அண்ணாதுரை

★

போளூர், பிப். 14—

9—2—54 மாலை 6 மணிக்கு போளூர் பழைய பஸ் நிலையத்தில் தோழர் ப. உ. சண்முகம் தலைமையில் தி. மு. கழகச் சார்பில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் சி. பி. சிற்றரசு, சி. வி. ராசகோபால் ஆகியோர் ஆச்சாரியார் ஆட்சியின் போக்கைப் பற்றிப் பேசினர்.

பொதுச் செயலாளர் தோழர் அண்ணாதுரைக்கு, போளூர் வட்டார தி. மு. கழகங்களின் சார்பில் வரவேற்பு இதழ்கள் வாசித்தளிக்கப்பட்டன; மலர் மாலைகள் சூட்டப்பட்டன. மன்றங்கள், கழகங்கள் சார்பிலும், மாணவர்கள், பிரமுகர்களாலும் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

பின்னர் தோழர் அண்ணாதுரை அவர்கள் தி. மு. கழகத்தின் வேலைத் திட்டங்கள் பற்றியும், ஆச்சாரியார் கொண்டு வந்துள்ள கல்வித் திட்டத்தினால் வரும் கேடுகளைப் பற்றியும் விரிவுரையாற்றினார்.

அத்தக்குடி நிதிக்கு ரூ. 201 அளிக்கப்பட்டது.

விவரங்கள் வருமாறு:—

போளூர் தி. மு. கழகம். 101; பொதுக்கூட்ட உண்டியல் வசூல்: ரூ. 50—12—9; வில்வாரணி தி. மு. கழகம்: ரூ. 21; உயர்நிலைப் பள்ளி மாணவர்கள்: ரூ. 6—5—0; எழுவாம்பாடி தி. மு. கழகம்: 6—5—0; தென்னூர் தி. மு. கழகம்: ரூ 5; கண்ணனூர் தி. மு. கழகம்: ரூ. 5; பொத்தரை தி. மு. கழகம்: ரூ 4; போளூர் மார்க்கெட் வியாபாரிகள்: ரூ 1-9-3; —ஆக மொத்தம் ரூ. 201.

போளூர் சுப்பிரமணியத்தின் ஆண் குழந்தைக்கு 'மதிவாணன்' என்று தோழர் அண்ணாதுரை அவர்களால் பெயர் சூட்டப்பட்டது.

லால்பேட்டையில் தி. மு. கழக பொதுக்கூட்டம்

லால்பேட்டை, பிப். 14—

9—2—54 இரவு 7 மணிக்கு சிதம்பரனார் தெருவில், தெ. ஆ. மாவட்ட தி. மு. கழக செயலாளர் தோழர் இரா. பாலகுருசாமி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தலைவர் முன்னுரையில் கழக குறிக்கோள்களை விளக்கியும், அத்தக்குடி சதி வழக்கிற்கு நிதி கொடுக்கவேண்டியதின் முக்கியத்தைப் பற்றியும் பேசினார்.

அடுத்து லால்பேட்டை தி. மு. கழக செயலாளர் தோழர் எல். என். இராமலிங்கம் திராவிடப் பிரிவினையின் அவசியத்தைப் பற்றியும், கழகம் நடத்திய, நடத்தபோகும் போராட்டங்களைப் பற்றியும் பேசினார்.

இறுதியில் தி. மு. கழக தலைமை நிலைய பொறுப்பாளர் தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., ஆச்சாரியாரின் சர்வாதிகாரப் போக்கைக் கண்டித்தும், நேருவின் தடுக்குத் தனத்தைப் பற்றியும், புதிய கல்வித் திட்டத்திலுள்ள கேடுகளை புள்ளி விவரங்களுடன் விளக்கியும் பேசினார்.

தலைவர் முடிவுரைக்குப் பின் செயலாளர் எல். என். இராமலிங்கம் நன்றி கூறினார்.

கூட்டத்தில் அத்தக்குடி சதி வழக்கிற்கு நிதி வசூலான விபரம்:- லால்பேட்டை தி. மு. க. ரூ. 10; உண்டியல் வசூல் ரூ. 16—1—9; மாலை ஏலம் விட்டதில் ரூ. 1; — ஆக ரூ. 27-1-9.

பச்சையாபுரம் தி. மு. கழக திறப்பு விழா

4—2—54-ல், முத்தயபுரம் தோழர் மு. மாணிக்கவாசகம் தலைமையில தோழர் எம். என். இராமசாமி அவர்கள், கழகத்தை திறந்து வைத்து சொற்பொழிவாற்றினார். தோழர் மாரியப்பன் பேசினார். தோழர் தி. க. சேர்மன் நன்றி கூறினார்.

திறப்பு விழாவை முன்னிட்டு 5—2—54 இரவு விளாத்திகுளம் தோழர் யாக்கோபு தலைமையில், தி. மு. கழகத் தோழர்களால் 'விதவையின் துயரம்' என்னும் நாடகம் நடைபெற்றது.

சேதவத்தை தி. மு. கழக திறப்பு விழா

இலங்கை, பிப். 14—

7—2—54ல், சேதவத்தை ரோடு, 19ம் இல்லத்தில் தோழர் மகாதேவன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: மகாதேவன்; துணைச் செயலாளர்: இராசன்; பொருளாளர்: பொ. கமலவாயர்; விளம்பர உறுப்பினர்: மா. தேவசகாயம்; செயற்குழு உறுப்பினர் 18 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கொச்சிக்கடையில் தி. மு. கழகம் துவக்கம்

இலங்கையில், நீர்கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த கொச்சிக்கடையில் 7—2—54 மாலை 6 மணிக்கு இலங்கை திராவிட முன்னேற்றக் கழக கிளை துவக்க விழா நகரசபை மண்டபத்தில் தோழர் டி. எம். பீர்முகம்மது தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் என். கதிரவன், இராவணமாணிக்கம், கே. என். எம். கலைநேசன், அன்பழகன், ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பின்னர் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்—வி. திருமாறன்; துணைச் செயலாளர் — பி. எட்வர்ட்; பொருளாளர்— கே. என் எம். செய்னு; மற்றும் பல தோழர்கள் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

விருத்தாசலம் வட்ட தி. மு. கழக அமைப்பு

7—2—54-ல், தோழர் சி. முனுசாமி இல்லத்தில், விருத்தாசலம் வட்ட தி. மு. கழகக் கிளை தோழர் பழனிகண்ணு தலைமையிலும், தோழர் சி. முனுசாமி முன்னிலையிலும் அமைக்கப்பட்டது. அதுபோது, கீழ்க்கண்ட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: தொ. பிச்சைமுத்து; துணைச் செயலாளர்: சிங்காரம்; பொருளாளர்: கோவிந்தசாமி; மாவட்டப்பிரதிநிதி: வீ. இராமசாமி.

புத்தரின் பொன்மொழி சுவடிகள்

பாதுகாக்க 8 கோடி ரூ. செலவு!

சென்னை, பிப். 14—

"600 ஏகரா நிலத்தில் ரூ. 8 கோடி செலவில், ரங்கூனில், புத்தரின் பொன்மொழி சுவடிகளைப் பாதுகாப்பதற்கும், பிரதினமும் பூஜை நடத்துவதற்கும் பர்மிய சர்க்கார் ஓர் கோவில் கட்டியுள்ளனர்," என்று இலங்கை மகாபோதி சங்கத் தலைவர் தெரிவித்தார்.

இந்தியாவின் செங்கல் தயாரிக்கும் முறை

அயல்நாட்டு நிபுணர்கள் பாராட்டு

புதுடில்லி, பிப். 12—

இந்தியாதான் செங்கல் தயாரிக்கும் முறையில், உலகிலுள்ள நாடுகளுக்கு வழிகாட்டியாக இருக்கிறது. இந்தியா தயாரிக்கும் முறையை அயல் நாட்டு நிபுணர்கள் பாராட்டியிருக்கின்றனர்.

இந்தியாவில் அமைக்கப்பட்டு வருகிற மூன்று எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களிலும் ஆண்டொன்றுக்கு மொத்தம் சுமார் 37 1 லட்சம் "பெரிய" டன் (2240 பவுண்ட்) "குரூட் ஆயில்" உபயோகிக்கப் படும்.

****

திராவிட முன்னேற்றக் கழக சட்ட திட்ட திருத்தம்

★

திராவிட முன்னேற்றக் கழகச் சட்ட திட்ட விதிகளில் மாற்றமோ, திருத்தமோ, சேர்ப்போ செய்ய நினைக்கும் **பொதுக் குழு உறுப்பினர்கள்,** அவற்றைத் தீர்மான வடிவில் எழுதி **28-2-54-ம்** நாளுக்குள் தலைமைக் கழகத்துக்கு வந்து சேருமாறு அனுப்பி வைக்க வேண்டுகிறேன்.

"அறிவகம்,"
சென்னை,
10—2—54.

சி. என். அண்ணாதுரை,
பொதுச் செயலாளர், தி. மு. கழகம்.

****

ஆச்சாரியார் சூது மதியை சுட்டிக் காட்டுகிறார் தோழர் சம்பத்

—o—

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

"இன்று, இந்த நாட்டின் அரசியலில் எல்லா மக்களையும் பாதிக்கக்கூடியதாயிருப்பது ஆச்சாரியாரின் புதிய ஆரம்பக் கல்வித் திட்டம். ஆரம்பக் கல்வி பெறுகிற 5-லிருந்து 11 வயது வரை உள்ள மாணவச் சிறுவர்கள், இந்தத் திட்டத்தைப் பற்றி எதுவும் சொல்ல இயலாது. ஆனால், உயர்நிலைப் பள்ளிகளிலே, கல்லூரிகளிலே படிக்கும் மாணவர்கள் இத்திட்டத்தைப் பற்றி ஆராய்ந்து ஒரு முடிவு காணமுடியாதா? இருக்கமுடியாதே?

இந்த நாட்டின் அரசியல் சட்டம் சொல்கிறது—'எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் தரப்பட வேண்டும்; ஒரு குறிப்பிட்ட ஜாதிக்காரன் என்பதற்காக அவனுக்கும் சம சந்தர்ப்பம் பெறுகிற உரிமையைப் பறிக்கக் கூடாது—என்று!' ஆனால், ஆச்சாரியார் சொல்கிறார்-அவனவன் அப்பன் குலத்தொழிலை மாணவச் சிறுவர்கள் செய்யவேண்டும்'—என்று! குலத்தொழில் என்பதே கடைந்தெடுத்த வர்ணாச்ரம, சனாதன வாசகமாயிற்றே! நேரடியான பார்ப்பனிய வாசகமாயிற்றே!!

செத்துக்கொண்டிருக்கும் சதிய முறைக்கு ஆக்கந்தேடுகிறார் ஆச்சாரியார் என்று நாம் சொன்னேம்; உடனே அவர், 'பார்த்தீர்களா? நாட்டு மக்களே! நாட்டிலே இப்போது நாற்பது சதவிகித இளைஞர்கள்தான் கல்வி அறிவு பெறுகிறார்கள்; பாக்கியுள்ள 60 பேரும் படிக்கவேண்டுமென்பதற்காக 'ஷிப்டு' முறையைப் புகுத்தினால், இவர்கள் எதிர்க்கிறார்கள,' என்று ஏமாற்றுகிறார். இதைக் கேட்கிற சாதாரண மக்கள் நம்பக்கூடும்;—இதுதக் கூற்றை; ஆனால், அவர் சொல்வது எவ்வளவு தூரம் உண்மை என்பதை யார்தான் ஆராய்ந்து பார்ப்பது?

இந்த நாட்டிலே சராசரி அறிவு படைத்தவர்களாக இருக்கிற, உத்தியோகஸ்தர்கள் கூடாது—ஆசிரியர்கள் கூடாது—பிறகு மாணவர்களும் கூடாது—என்றால், யார்தான் இந்தப் பித்தலாட்டங்களை நாட்டு மக்களுக்கு விளக்கிக் காட்டுவது?

'ஷிப்டு' முறை என்பது தொழிற்சாலைகளிலே உற்பத்தியைப் பெருக்குவதற்காக 24 மணி நேரங்கொண்ட நாளை, மூன்றாகப் பிரித்து 8 மணி நேர விதம் தொழிலாளர்களை வேலை வாங்குகிறார்கள். அதிக உற்பத்தியை குறைந்த வசதியைக் கொண்டு செய்வதற்காக, தொழிற்சாலைகளில் கையாளப்படும் இந்த 'ஷிப்டு' முறையைப் பள்ளிகளிலே புகுத்துவது என்ன நியாயம்? ஆசிரியர்கள் என்ன இயந்திரங்களா? அல்லது பயிற்சிதான் உற்பத்தி செய்யக் கூடிய பொருளா?

நாட்டிலே 40 சத விகிதத்தினர் தான் படிக்கிறார்கள்; மற்ற 60 சத விகிதத்தினர் படிக்கவில்லை என்றால் பள்ளிகளிலே இடமில்லை என்று ஆச்சாரியார் காட்டும் காரணம் உண்மைதானா?

நீங்கள் எங்காவது கேள்விப்பட்டீர்களா? ஐந்து வயது மாணவனுக்கு ஆரம்பப் பள்ளியில் இடமில்லாததால் அவன் படிக்க முடியவில்லை என்று எந்தப் பெற்றோராவது சொல்லியதுண்டா?

இடமில்லை என்பது எங்கே என்றால், கலைக் கல்லூரிகளிலே இஞ்ஜினியரிங், மருத்துவக் கல்லூரிகளிலே — இடமில்லாமலிருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறோமே யன்றி, எலிமெண்டரி பாடசாலைகளில் இடமில்லை என்று நாம் கேள்விப்பட்டதில்லை.

பின், 60 சத விகிதத்தினர் படிக்காமலிருப்பதற்கு உண்மையான காரணம் என்னவென்றால், பல்வேறு சிற்றூர்களுக்குப் பொதுவாகக் காட்டப்படும் வறுமையும், பள்ளிகள் பல மாணவர்களிருக்கும் இடத்திற்கு அருகாமையில் இல்லாதிருப்பதும் தானே!

புதிய திட்டம் அமுலான பிறகு, ஆச்சாரியார் சொல்லும் காரணம் உண்மையானதென்றால், முன்பிருந்த மாணவர்களின் தொகை இரட்டிப்பாயிருக்க வேண்டுமே! எங்காவது அப்படி ஆயிருக்கிறதென்று ஆச்சாரியார் காட்ட முடியுமா? இந்த நாட்டிலே பெரும்பாலான பெற்றோருக்கு தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பத் தேவையான குறைந்த பட்ச வசதிகள் கிடையாது. பள்ளி செல்லும் வயதுக்குத் தேவையான சாதாரண உடைகளும், பசிக்காமல், பள்ளி சென்று திரும்பும் வரைக்காவது தெம்பு தரும் உணவும் தர, பெற்றோர்களிலே பெரும்பாலானவர்கட்கு இயலாததாலும், பல மைல்களுக்கு பள்ளிகளே இல்லாமலிருப்பதும் தான் உண்மையான காரணங்கள் 60 சத விகிதத்தினர் படிக்காமலிருப்பதற்கு!

இதை விட்டுவிட்டு — இடமில்லை மாணவர்களுக்கு—எனவே தான், 'ஷிப்டு' முறை—என்று சொல்கிற பித்தலாட்டத்தை உபயோகப்படுத்த சராசரி அறிவுள்ளவர்களைத் தவிர வேறு யாரால் முடியும்?

பல கிராமங்களிலே, போதுமான மாணவர்கள் பள்ளிக்கு வர முடியாமையினால் பள்ளிக்கூடங்கள் மூடப்படுகின்ற நிலை நாட்டிலே இருக்கும் போது, இந்த புதிய திட்டத்தை நாம் எப்படிக் கண்டிக்காமலிருக்க முடியும்? மாணவர்களுந்தான் எப்படி இந்த பித்தலாட்டத்தை சகித்துக் கொண்டிருக்க முடியும்?

பண்டித நேரு, இந்தியத் துணைக் கண்டத்திற்கு விடுதலை கிடைத்துவிட்டதாக, 1947-ம் ஆண்டிலே வானொலியிலே பிரகடனம் செய்த போது, 'இந்தியாவின் உயரிய லட்சியங்கள் நிறைவேறிவிட்டன; இந்த நாட்டிலே, இனி மக்களால் மக்களுக்காக மக்களாலேயே நடத்தப்படும் ஆட்சி நிலவும்; தனிப்பட்ட மனிதர்களின் புனிதமான உயரிய உரிமைகள் பாதுகாக்கப்படும்,' என்றெல்லாம் பேசினார். ஆனால், இப்போது திரு—கேரளத்தில் மக்கள் விரும்புகிறவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள்; அப்படி அமைகிற ஒரு ஆட்சி காங்கிரசிற்கு எதிராக இருக்குமானால் அதை நீடிக்க விடமாட்டோம் என்ற தொனியில் பேசுகிறார் என்றால், அவரின் உள்ளம் நேர்மையானது என்று எப்படி நாம் எண்ண முடியும்? அவர் பேச்சு ஜனநாயக அடிப்படையையே தகர்த்தெறிகிற முறையில் அல்லவோ இருக்கிறது?

பிரிட்டிஷ் கயானு என்ற காலனி நாட்டில், அந்த நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மந்திரி சபையையும், மக்கள் சபையையும் வெள்ளை ஏகாதிபத்தியவாதிகள் கலைத்து விட்டனர்! அந்த மந்திரி சபையிலிருந்த ஜெட்டி ஜெகன். பர்ன்ஹாம் என்ற இரு மந்திரிகள், சமீபத்திலே இந்த நாட்டிற்கு வந்து நேருவைச் சந்தித்தபோது, பண்டித நேரு. 'வெள்ளையரின் செயல் ஏகாதிபத்திய மனப்பான்மை கொண்டது,' எனக் கண்டித்தார். ஆனால், சில நாட்களிலேயே, 'திரு—கொச்சியில் காங்கிரசல்லாத மந்திரி சபையை அனுமதிக்க மாட்டேன்,' என்று ஆர்ப்பரிக்கிறார்.

இந்த அரசியல் பித்தலாட்டங்களை எல்லாம், நாட்டைப் பற்றும், நல்லறிவும், விவேகமும் உடையவர்களால் தானே மக்களுக்கு எடுத்துச் சொல்ல முடியும்? மாணவர்களுக்கும் இந்த விஷயங்களைத் தெரிந்திருந்தும், 'ஈடுபடாதே அரசியலிலே,' என்று அவர்களைச் சொன்னால், எப்படி முடியும் அவர்களால்?

[தோழர் சம்பத் அவர்கள் பேச்சு முடியவில்லை. தொடர்ந்து நாளை இதழில் வெளிவரும்.]

மாரியம்மன்........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிடித்து, அலாவுதீனிடம் குறிப்பிட்ட கோயிலை இடிக்கக் கூடாது என தூது அனுப்பினனும். பார்ப்பனனின் வேண்டுகோளைப் புறக்கணித்ததும், அரசனை வேண்டிக் கொண்டும், அவன் பேச்சை அரசன் மதிக்காமல் சித்லா மாதா கோயிலை இடித்துத் தள்ள முனைந்தானும்.

இது கண்ட அந்தணன், தனது மந்திர சக்தியை உபயோகித்து, காளிவத்தில் உள்ளவரை அலாவுதீன் கில்ஜியின் கண்களைக் குருடாக்கிவிட்டானும்! உடனே மாரியம்மன் கோயிலை மட்டும் இடிக்காமல் கில்ஜி வடை விட்டு வெளியேறி விட்டானும்!

அம்முனிவரின் செய்கையால் மாருதத்தான் அவனுடைய சந்ததியில் வந்தவர்கள் இன்றும் அந்தக் கோவில் பூசாரிகளில் ஒருவராக நியமிக்கப்பட்டுள்ளார்களாம்!

கட்சி சர்க்கார் கல்வித் துறையில் குறுக்கிடுவது கூடாது

—(:)—

கல்வித் துறை அரசியல் கட்சிகளுக்கு புறம்பாக இருக்க வேண்டும்

டாக்டர் லட்சுமணசாமி அறிவுரை

திருச்சிராப்பள்ளி, பிப். 13—

"கல்வி சம்பந்தமான துறைகளில் என்ன வேலை செய்ய வேண்டுமென்று சர்க்காரில் உள்ள அரசியல்வாதிகள், கல்வி அதிகாரிகளுக்குப் போதிப்பதும், வயது வந்தோர் வாக்குரிமை மூலம் அதிகாரத்திற்கு வந்த கட்சி, கல்வி விஷயத்தில் கல்வி அதிகாரிகளுக்கு யோசனை கூறுவதும கூடாது,"

என்று, இங்கு, தேசியக் கல்லூரி தினத்தை முன்னிட்டு நடைபெற்ற மாணவர்கள் கூட்டத்தில் பேசுகையில் சென்னை சர்வகலாசாலை துணை வேந்தர் டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார் குறிப்பிட்டார்.

"இந்தியாவில் தற்போது கல்வியை எவ்விதத்தில் அமைப்பது என்பதில், ஒரு நிச்சயமற்ற நிலைமை நிலவுகிறது. இந்த நாட்டின் கல்வியின் எதிர்காலம் பற்றி நாம் தீவிரமாகச் சிந்தித்து, நம்முடைய கருத்தைத் தெரிவிக்காமலிருந்தால், விரும்பத் தகாத சக்திகளும், யோசனைகளும் இதில் நுழையும் என்று நான் பயப்படுகிறேன்," என்று அவர் மேலும் சொன்னார்.

ரூ. 65-லட்சத்திற்குக் கதர்!

இந்திய சர்க்கார் வாங்குமாம்!

..., பிப். 14—

இந்திய சர்க்கார் பல்வேறு இலாகாக்களிலும் உபயோகிக்க ரூ. 65 லட்சத்திற்குக் கதர் வாங்க அகில இந்திய கதர் கிராம அபிவிருத்தி போர்டிடம் உத்தரவு கொடுத்துள்ளனர். இதேபோல் கதர் வாங்க, மாகில சர்க்கார்களையும் இந்திய சர்க்கார் கேட்டுக்கொண்டிருக்கிறது.

நிர்வாக இயந்திரத்திற்கும் கட்சி சர்க்காருக்குமுள்ள தொடர்பு

— (:) —

துணைவேந்தர் விளக்கம்

மதுரை, பிப். 12—

"ஜனநாயக அரசியலில் பலமான எதிர்க்கட்சி இருக்க வேண்டும். அந்தக் கட்சி மாற்று அரசாங்கமாக செயல்படவும் தகுதியுடையதாக இருத்தல் வேண்டும்,'

—என்று டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார் மதுரைக் கல்லூரி 65-வது ஆண்டு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"நிபுணர்களுடைய உதவியில்லாமல் எந்த அரசாங்கமும் நடைபெற முடியாது. நிபுணர்களைத் தேர்ந்தெடுக்க சிறந்த வழி பொதுத் தேர்தல் அல்ல. நிரந்தரமான சிவில் நிர்வாகமில்லாமல் ஜனநாயக அரசாங்கம் திறமையாகப் பணியாற்ற முடியாது. இந்த நிர்வாகம் அரசியல் உலகத்திற்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும். நிர்வாகத்தினர் பொது மக்கள் குறை அலட்சியப்படுத்திவிடக் கூடாது. அரசாங்கக் கொள்கையை நிறைவேற்றும் நிர்வாகம் பொது மக்களிடம் பக்ஷமாக நடந்து கொள்ள வேண்டும்.

மக்களின் குறிப்பிட்ட வாழ்க்கை முறையையும், தரத்தையும் தாங்க வேண்டியதே சர்க்காரின் கடமை; மக்களை நல்லவர்களாக்கி, அறநெறியை அவர்கள் உணரும்படி செய்யும் அற நிலையமல்ல அரசாங்கம்! இதுபோன்ற எண்ணம் மிகவும் அபாயகரமானது! சட்டங்கள் இயற்றும்போது, அரசாங்கம், மக்கள் கருத்துக்கு செவி சாய்க்க வேண்டும் மக்கள் தான் அரசாங்கத்தை உண்டாக்குகிறார்கள் என்பதையும், அரசாங்கத்தின் அதிகாரத்திற்கு ஒரு வரம்பு உண்டென்பதையும் சர்க்கார் மறந்துவிடக் கூடாது.

சர்வாதிகாரம் எவ்வளவு அபாயத்தை விளைவிக்கும் என்பதை உணர்ந்தவர்கள் அமெரிக்கர்கள் தான்; அதனால்தான், அரசாங்கத்தின் நடவடிக்கையைக் கண்காணித்துக் கட்டுப்படுத்துவதற்குப் பல வழிவகைகளை அவர்கள் வகுத்துள்ளனர்.

இன்று நமது நாட்டில் ஜனநாயகம், முக்கிய கட்டத்தில் இருக்கிறது. நீதி, சமத்துவம் முதலிய உணர்வுகளால் வெளியாகும் ஜனநாயக உணர்ச்சியை ஜனநாயகவாதிகள் பெறவில்லையென்றால், ஜனநாயகம், அதனுடைய பணியை செய்ய இயலாது போய்விடும்.

விவாதித்தல், விவாதங்கள் நடத்துதல், வற்புறுத்தல் போன்ற முறைகளைக் கொண்டு தான் நமது நாட்டில் ஜனநாயகத்தை வெற்றிபெறச் செய்ய முடியும்."

புகலூர் ஆலை.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யம் ஆகியவை சம்மந்தமாகவும் விவரிக்கப்பட்டுள்ளது.

காலியாக உள்ள வேலையிடங்களுக்குத் தேவையானவர்களை முன்பிருந்த தொழிலாளர்களிலிருந்து சேர்த்துக் கொள்ளப்படும் என்றும், வேலைகளுக்கான சம்பள நிர்ணயமும் (பஞ்சப்படி உட்பட) குறிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பின்படி புதிதாகத் தொழிலாளர்கள் சேர்க்கப்பட மாட்டார்கள் என்பது தெளிவுபடுத்தப் பட்டிருந்தாலும் முன்பிருந்த எல்லாத் தொழிலாளர்களும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள் என்று உறுதியளிக்கப் படவில்லை.

மேலும், புதிதாக நிர்ணயிக்கப்பட்டிருக்கின்ற சம்பளம் முன்பு கொடுக்கப்பட்டு வந்த அளவில் 100-க்கு 30 சதவிகிதம் குறைவானதாகும்.

இந்த அறிவிப்புத் தொழிலாளர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியையும், அதே சமயம் அதிருப்திகரமான பரபரப்பையும் ஏற்படுத்தி விட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

புதிய திட்டத்தின்படி இது வரை சுமார் 40 தொழிலாளர்கள் வேலைக்கு எடுக்கப்பட்டுள்ளனர். (ந. நி.)

கின்னரர் கிம்புருடர்

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இருக்கிறது; எனது அபூர்வ திட்டம் மாணவர்களுக்கு விடுதலையளிக்கும்" என்கிறார் ஆச்சாரியார். ஓராண்டு 365 நாட்களில் 220 நாட்கள்தான் பள்ளிகள் நடக்கும்; 145 நாட்கள் முழு விடுமுறை நாட்கள். ஒரு நாளில் 24 மணி மணி நேரத்தில், 12 மணி நேரம் மாணவன் தூங்குகிறான்; மீதி 12 மணி நேரத்தில் $1\frac{1}{2}$ மணி நேரம் குளிக்க, உண்ண, உடுக்க எடுத்துக்கொள்ளுகிறான்; $5\frac{1}{2}$ மணி நேரம் பள்ளி நேரம்; 5 மணி நேரம் ஓய்வு கிடைக்கிறது. இந்த $5\frac{1}{2}$ மணி நேரம் பள்ளியில் படிப்பது, ஆச்சாரியார் கண்களுக்கு சிறைச்சாலையாகத் தெரிகிறது.

ஆச்சாரியார் கருத்துப்படியே கிராமக் கைத்தொழில்கள் பயில வசதிகளும் 5 மணி நேரம் கிடைக்கும் ஓய்வு நேரம் போதாதா? எந்தப் பெற்றோராவது, தங்கள் குழந்தைகள் தங்கள் குலத்தொழில் பயில உதவிக்கு வேண்டுமென்று கேட்டார்களா? அல்லது எந்த மாணவர்களாவது கேட்டார்களா?"

ஆகவே, ஆச்சாரியார் திட்டம் நாலு வர்ணாசிரமத் தர்மத்தையும் வளர்ப்பது; கல்வித் தரத்தையும் சீர்குலைப்பது; ஆகவே, பாதகமான இந்தத் திட்டம் ஒழிக்கப்பட வேண்டும்."

திராவிட முன்னேற்றக் கழகத் தலைமை நிலையத்தார் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால், ஜோதி அச்சகத்தில் அச்சிட்டு (24, சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.